**23.06.2026**

**அ.வ.எண்.377/2008**

**<u>வா.சா.2 கோவிந்தசாமி குறுக்கு விசாரணை</u>**

**1. எனது வயது 74 ஆகும். எனது வயதை நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதியின் நிலம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார்கள். தாவாசொத்து வாதிகளுக்குதான் சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாணவாக்குமூலத்தில் தாவாசொத்து 1ம் பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் வழங்கபட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தில் நான் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் வருடம் ஞாபகமில்லை, சுமார் 45 வருடத்திற்கு முன்பு கையொப்பம் செய்தேன். அப்போது எனக்கு 23 வயதிருக்கும், அப்போது நான் மேஸ்திரி வேலை செய்து வந்தேன்.**

**2. 1ம் பிரதிவாதிக்கு எவ்வளவு ரூபாய் கிரையம் கொடுத்தார்கள் என்றால் ரூ.4000/- இருக்கும். யார் யாருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சுப்புராயன் என்பவர் ராகவன் மனைவி அம்மாகண்ணு என்பவருக்கு கிரையம் கொடுத்தார். மேற்சொன்ன கிரைய பத்திரத்தில் நான் எத்தனையாவது சாட்சி என்றால் 3 வது சாட்சியாக கையொப்பம்**

செய்துள்ளேன். மேற்சொன்ன கிரைய பத்திரத்தை ஏன் பதிவு செய்யவில்லை என்றால் சுப்புராயனுக்கு அரசாங்கத்தால் வழங்கபட்ட நிலம் என்பதால் பட்டாபடி பதிவு செய்யகூடாது என்ற நிபந்தனை இருந்தால் பதிவு செய்வில்லை.

3. குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு பதிவு செய்யலாம் என்ற நிபந்தனை இருந்திருக்கும், எனவே எத்தனை வருடத்திற்கு பிறகு பதிவு செய்யலாம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அம்மாகண்ணு எந்த வருடம், தேதி தாவாசொத்தை சுவாதீனம் எடுத்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் அம்மாகண்ணு கிரைபத்திரம் எழுதி கொடுத்த பிறகு அன்றைய தினமே சுவாதீனம் எடுத்துவிட்டார் என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவாசொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அம்மாகண்ணு இறந்தபிறகு அவரது வாரிசுகள் தாவாசொத்தை அனுபவித்து வருகிறார்கள், அவர்கள் என்ன பயிர் செய்து வருகிறார்கள் என்றால் உளுந்து, கேழ்வரகு பயிர் செய்து வருகிறார்கள்.

4. வாதிகள் தாவாசொத்திற்கு வரி செலுத்தியுள்ளார்களா என்றால் செலுத்தியுள்ளார்கள். வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் மாமன் மச்சான் உறவு ஆவர்கள். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை, வாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சி அளிக்க வந்தேன்.